# பாதீடு, අයවැය, Budget
# 2016

1. கல்வி அமைச்சர் அலுவலகம்
   අධ්‍යාපන අමාත්‍ය කාර්යාලය
   Education Minister's Office

2. கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
   අධ්‍යාපන , සංස්කෘතික කටයුතු , ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යාංශය
   Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs

3. கல்வித் திணைக்களம்
   අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
   Department of Education

4. விளையாட்டுத் திணைக்களம்
   ක්‍රීඩා දෙපාර්තමේන්තුව
   Department of Sports

5. கலாச்சாரத் திணைக்களம்
   සංස්කෘතික දෙපාර්තමේන්තුව
   Department of Cultural Affairs

6. இளைஞர் விவகாரப் பிரிவு
   යෞවන කටයුතු අංශය
   Youth Affairs Unit

# பாதீட்டு உரை –2016

## 1. அறிமுகம்

1.1 கௌரவ அவைத்தலைவர் அவர்களே, வளர்ச்சியடைந்து வரும் வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார துறையின் 2016 ஆம் ஆண்டுக்குரிய மூன்றாவது மாகாண வரவு செலவுத்திட்டத்தினை இவ் வடக்கு மாகாண சபையில் இன்று சமர்ப்பிப்பதனையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

1.2 வடக்குமாகாணத்தின் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார துறை நிர்வாக கட்டமைப்பானது மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் அமைந்துள்ள மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகம், மற்றும் வலயக் கல்வி அலுவலகங்கள், விளையாட்டுத்திணைக்களம், கலாச்சாரப்பிரிவு ஆகியவற்றால் நிர்வகிக்கப்படுகின்றது. மேலும் மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் 12 வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் 35 கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஊடாக அந்தந்த மாவட்டங்களுக்குரிய கல்வித்துறை நெறிப்படுத்தப்படுகின்றது. விளையாட்டுத் திணைக்களம், கலாச்சாரப்பிரிவு ஆகியவற்றின் செயற்பாடுகள் அனைத்தும் ஐந்து மாவட்டங்களிலுமுள்ள மாவட்ட அலுவலகங்களினூடாக நெறிப்படுத்தப்படுகின்றது.

1.3 1,058,762 மக்கள் தொகையைக் கொண்ட (தரவுமூலம் : தொகைமதிப்பு புள்ளி விபரத் திணைக்களம்,இலங்கை, 2012) வடக்கு மாகாணத்தின் கல்விச்சேவை வழங்கலானது 995 பாடசாலைகள் மூலமாக 253,564 மாணவர்களுக்கு 15269 ஆசிரியர்கள் 782 அதிபர்கள் 118 கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் ஆளணியைப் பயன்படுத்தி வழங்கப்படுகின்றது. இதில் 1060 மாகாணப்பாடசாலைகளும் 22 தேசியப்பாடசாலைகளும் 6 தனியார் பாடசாலைகளும் அடங்குகின்றன. தேசியப்பாடசாலைகள் மத்திய அரசாங்கத்தினாலும் 1060 மாகாணப்பாடசாலைகளும் மாகாண சபைக்குரிய கல்வி அமைச்சினாலும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

1.4 எமது வடக்கு மாகாணமானது கடந்த 30 வருட கால கொடிய யுத்தத்தினால் பல்வேறு வழிகளிலும் சொல்லொணாத் துயரங்களையும் கடுமையான பாதிப்புக்களையும் எதிர்நோக்கிய மாகாணமாகும்.இக்காலப்பகுதியில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த அதிகளவான பாடசாலைகள் முற்றாக சேதமடைந்ததுடன் ஏனைய மாவட்டங்களிலுள்ள சில பாடசாலைகளும் முற்றாகவோ அல்லது பகுதியாகவோ சேதமடைந்திருந்தன. எனவே போருக்குப்பின்னரான காலப்பகுதியில் மேற்குறிப்பிடப்பட்ட

பிரதேசங்களில் அடிப்படைக்கல்விக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான தேவைப்பாடு அதிகமாக காணப்பட்டது.வட மாகாணத்துக்குரிய இந்த முதலாவது மாகாண சபை அமைவதற்கு முன்னர் மத்திய கல்வி அமைச்சு,அரச சார்பற்ற நிறுவனங்கள்,வெளிநாட்டு மூலவளங்கள் மற்றும் மாகாண கல்வி,பண்பாட்டலுவல்கள்,விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் உதவியுடன் யுத்தத்தால் சேதமடைந்த பாடசாலைகள் அடிப்படை உட்கட்டுமான வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் மேலும் பல பாடசாலைகளில் உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை இன்னும் உள்ளது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

1.5 30 வருட கால கொடிய யுத்தத்தினால் எமது மாகாணம் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கிய போதும் இக்காலப்பகுதியில் எமது மாகாண மாணவர்கள் க.பொ.த(உ/த)2014 பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலாவதாக வந்துள்ளார்கள். 2015 ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதல் 50 பாடசாலைகளுக்குள் 6 பாடசாலைகள் வட மாகாணத்தில் வந்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

1.6 வட மாகாணத்தில் போருக்குப்பின்னரான கல்வித்துறை அபிவிருத்திக்கான தேவைப்பாடு அதிகரித்துக் காணப்படுகின்றமையானது எமது மாகாணத்தின் கல்வித்துறையை முழுமையான முறையில் கட்டியெழுப்புவதற்கு இன்னும் சவாலாகவே உள்ளது இங்கு காணப்படும் பௌதீக மற்றும் மனிதவள பற்றாக்குறையானது இதற்கான முக்கிய காரணமாக உள்ளது.குறிப்பாக மனிதவள பற்றாக்குறையானது தரமான கல்விச் சேவையை வழங்குவதற்கு முக்கியமான சவாலாக உள்ளது.இவற்றில் பிரதானமாக வடமாகாணத்தில் ஆங்கிலம், தகவல் தொழில்நுட்பம், பொறிமுறை தொழில்நுட்பம் பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை, அதிபர் சேவை உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை, கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை, பொறியியளாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை உள்ளது.

மேலும் எமது வடக்கு மாகாணமானது ஏனைய மாகாணங்களைப் போலல்லாது முக்கியமாக கீழ்வரும் இருவகைக் காரணங்களால் விசேட அவதானத்தைப் பெறுகின்றது.

1. இயற்கையாகவே ஏனைய மாகாணங்களில் காணப்படும் சவால்களான இயற்கை இடர்களை எதிர்கொள்ளல்
2. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் மற்றும் 30 வருட கால கோர யுத்தத்தின் பிடியில் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கியமை.

இவற்றின் விளைவாக எமது மாகாணமானது

a) 10,000- 20,000 வரையான விசேட தேவையுடையவர்களை கொண்டமைந்துள்ளது.
b) பெருமளவிலான உளவள மற்றும் சமூகத்தினுடைய துணை தேவைப்படுபவர்களை கொண்டுள்ள மாகாணமாக உள்ளது.
c) பெருமளவிலான பெற்றோர்கள் மற்றும் உடன்பிறப்புக்களை இழந்த குழந்தைகள் மற்றும் குழந்தைகளை இழந்த பெற்றோர்களை கொண்டமைந்த மாகாணம்.

1.7 எனவே மேற்குறிப்பிடப்பட்ட சவால்களை வெற்றி கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டுக்குரிய வடமாகாண கல்வித்துறைக்குரிய வரவு செலவுத்திட்டத்தை மிகவும் வினைத்திறமையாக தயாரிக்க வேண்டிய கடப்பாடு கல்வி அமைச்சர் என்ற வகையிலே எனக்கு உள்ளது.இருந்த போதும் 2016 ஆம் ஆண்டுக்கு எமக்கு வழங்கப்பட்ட நிதியானது இச்சவால்களை எதிர் கொள்வதற்கு போதியதாக இல்லாதிருப்பது எமக்கு மாத்திரமன்றி மாகாணத்திலுள்ள அனைவருக்கும் ஏமாற்றத்தை அளிப்பதாகவே உள்ளது.

1.8 2015 ஆம் ஆண்டுக்குரிய மீண்டெழும் செலவீனத்துக்குரிய மதிப்பீடு ரூபா 9,133 மில்லியன்

இவற்றில் 30ஆம் திகதி நவம்பர் மாதம் 2015 வரையான மொத்த மீண்டெழும் செலவீனம் ரூபா 8,272 மில்லியன் ஆகும்.மேலும் 2015ஆம் ஆண்டுக்குரிய மூலதனச்செலவீனத்திற்காக ஒதுக்கப்பட்ட 1404.33 மில்லியன் ரூபாவில் 30ஆம் திகதி நவம்பர் மாதம் 2015 வரையான மொத்த செலவீனம் ரூபா 886.51 மில்லியன் ஆகும். மூலதனச்செலவீன ஒதுக்கீடானது(மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 278.00 மில்லியன் ரூபாவில் 167.65 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது, மிகுதி வேலைகள் யாவும் 31.12.2015 இனுள் முடிவுறுத்தப்படும். இதற்குரிய சிட்டைகள் தற்போது பரீசீலிக்கப்படுகின்றன. TSEP வேலைத்திட்டத்தில் 365.00 Mn இல் 236.811 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. மிகுதி வேலைகள் யாவும் 31.12.2015 யினுள் செலவு செய்யப்படும். ஏனையவற்றில் மத்திய கல்வி அமைச்சினால் செய்யப்படும் வேலைகளில் 500 மில்லியனில் 356.90 மில்லியனும் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியில் 258.66 மில்லியனில் 113.99 மில்லியனும் செலவிடப்பட்டுள்ளது.இவ்வேலைகள் தொடர் வேலைகளாக 2016 ஆண்டில் நிறைவு செய்யப்படும்.

எனவே மொத்தமாக ஒதுக்கப்பட்ட 9,133.00 மில்லியன் ரூபாவில் 8,272.00 மில்லியன் ரூபா 30/11/2015 வரை செலவு செய்யப்பட்டுள்ளது. இது ஒதுக்கீட்டில் 90.57% ஆகும். மிகுதியாகவுள்ள (9,133.00 – 8,272.00) 861.00 மில்லியனில் 1.12.2015 இலிருந்து 31.12.2015 க்குள் 500.00 மில்லியன் செலவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2. 2016 ஆம் ஆண்டுக்குரிய ஒதுக்கீடுகள்

2.1 கௌரவ அவைத்தலைவர் அவர்களே, 2016 ஆம் ஆண்டு

### 2.1.1 மீண்டெழும் செலவீன ஒதுக்கீடு (மில்லியன் ரூபா)

| | | |
|---|---|---|
| 1. | கல்வி அமைச்சர் அலுவலகம் | 15.279 |
| 2. | கல்வி அமைச்சு அலுவலகம் | 46.850 |
| 3. | முன்பள்ளி அபிவிருத்திப்பிரிவு | 118.278 |
| 4. | முகாமைத்துவ அபிவிருத்தியும் பயிற்சியும் | 12.968 |
| 5. | கலாச்சாரப்பிரிவு | 46.754 |
| 6. | கல்வி திணைக்களம் | 9002.502 |
| 7. | விளையாட்டுத் திணைக்களம் | 55.000 |
| | **மொத்தம்** | **9297.631** |

### 2.1.2 மூலதனச்செலவீன ஒதுக்கீடு (மில்லியன் ரூபா)

| | | |
|---|---|---|
| 1. | பிரமாண அடிப்படையிலான நிதிக்கொடை(CBG) | 16.500 |
| 2. | மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதிக்கொடை(PSDG)<br>(இதில் கலாச்சாரப்பிரிவு -9.00<br>விளையாட்டுத் திணைக்களம்- -22.00<br>கல்வி திணைக்களம் -969.00 | 1,000.000 |
| 3. | TSEP கல்வி சார் அபிவிருத்தி திட்டம் | 465.000 |
| | **மொத்தம்** | **1481.500** |

2016 இல் பாதீட்டின் ஊடாக கிடைக்கவுள்ள மொத்த ஒதுக்கீடு 10779.131மில்லியன் ரூபா

## 2016 Budget - Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs, Northern Province

Recurrent

| No | Head/Programme/ Project | Ministry/Department | Approved Cadre | Personal Empowerment | ORE | Total |
|---|---|---|---|---|---|---|
| 1 | 440-03-01 | Minister & his personal staff | 11 | 7.979 | 7.300 | 15.279 |
| 2 | 440-03-02 | Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs | 51 | 26.850 | 20.000 | 46.850 |
| 3 | 440-80-04 | Early Childhood Development | 2 | 0.950 | 117.328 | 118.278 |
| 4 | 440-09-03 | Management Development & Training (English) | 6 | 2.968 | 10.000 | 12.968 |
| 5 | 440-93-05 | Cultural Affairs Office | 39 | 18.754 | 28.000 | 46.754 |
| 6 | 441-3-2 | Department of Education | 990 | 397.285 | 73.000 | 470.285 |
| | 441-80-4 | Primary Education | 6349 | 2990.000 | 146.000 | 3136.000 |
| | 441-87-5 | Secondary Education | 10610 | 5049.477 | 320.000 | 5369.477 |
| | 441-87-6 | Special Education | 2 | 1.048 | 7.405 | 8.453 |
| | 441-87-7 | Non - formal Education | 6 | 3.652 | 8.000 | 11.652 |
| | 441-88-8 | Education Planning and Research | 1 | 0.635 | 6.000 | 6.635 |
| 7 | 442-90-4 | Department of Sports | 58 | 26.250 | 28.750 | 55.000 |
| **Total** | | | **17925** | **8525.848** | **771.783** | **9297.631** |

## 3. 2016 ஆம் ஆண்டுக்குரிய பிரதான முன்மொழிவுகள்

3.1 கௌரவ அவைத்தலைவர் அவர்களே,வடக்கு மாகாணத்தின் கல்வித் துறையை மேலும் மேம்படுத்தும் நோக்குடன் 2016 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டிய பிரதான வேலைத்திட்டங்களை நான் இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

3.2 2016 ஆம் ஆண்டு முதல் வட மாகாண மக்களுக்கான கல்விச்சேவை வழங்கலை மேலும் மேம்படுத்தும் பொருட்டு வட மாகாண கல்வித்துறைக்கான 5 வருட தந்திரோபாயத் திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது. எதிர்காலங்களில் கல்வித்துறையினை மேம்படுத்துவதற்கான நிதிகளை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்காக இந்த 5 வருட தந்திரோபாயத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கீழ்வரும் தந்திரோபாயங்களுடாக எதிர்காலத்திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.அவையாவன

1. மனிதவள அபிவிருத்தி
2. க.பொ.த.(உ/த) இல் விஞ்ஞானப்பிரில் கற்கும் மாணவர் எண்ணிக்கையை 40% ஆக உயர்த்தல்
3. தரமான தரவு வழங்கலினை மேம்படுத்தல்
4. தரமான கல்வி மாணவர்களுக்கு வழங்கலினை உறுதிப்படுத்தல்
5. மாணவர்களுக்கு கற்றலுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்
6. பின்தங்கிய இடங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான இருப்பிட வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்
7. விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கான உபகரணங்களைப்பெற்றுக் கொடுத்தலும் விசேட கல்வித் தேவைகளை நிறைவேற்றலும்
8. அண்மையிலுள்ள பாடசாலை நல்ல பாடசாலை என்ற மத்திய அரசின் கொள்கையை அமுல்படுத்தல்

### 3.3 **மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதிக்கொடை**

2016 ஆம் ஆண்டில் இக்கொடையின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு 377.91 மில்லியன் ரூபாவும் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 184.11 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 116.28 மில்லியன் ரூபாவும் வவுனியா மாவட்டத்திற்கு 164.73 மில்லியன் ரூபாவும் மன்னார் மாவட்டத்திற்கு 125.97 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.இவற்றில் பாடசாலை கட்டடங்கள் பராரமரிப்பு மற்றும் பகுதியாக கட்டப்பட்டவற்றை முழுமைப்படுத்தல்,அடிப்படை மலசலகூட வசதிகளை இல்லாத பாடசாலைகளுக்கு அவ் வசதிகளை வழங்கல்,விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளை ஏற்படுத்தல், இலத்திரனியல் நூலக (eLibrary) வசதியை ஏற்படுத்தல், பின்தங்கிய இடங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான இருப்பிட வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்,

முறைசாரக்கல்வி பயிலும் மாணவர்களுக்கான கணணி, தளபாட வசதிகளை வழங்கல், பாடசாலை மாணவர்களுக்கான கதிரை, மேசை கொள்வனவு, பாடசாலை ஆசிரியர்களுக்கான கதிரை, மேசை கொள்வனவு எனும் செயற்பாடுகள் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதிக்கொடையின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 3.4 TSEP கல்வி சார் அபிவிருத்தி திட்டம்

இதன் கீழ் 239.30 மில்லியன் ரூபாவிற்கு 42 பாடசாலைகளில் கட்டடங்கள் நிமாணித்தல், முறைசாரக்கல்வி நிலையம் அமைத்தல் (மடு,துணுக்காய்), விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளை ஏற்படுத்தல் மேற்கொள்ளப்படவுள்ளது. 105.71 மில்லியன் ரூபாவிற்கு மாகாண கல்வித் திணைக்களம், வலயக் கல்வித் திணைக்களங்களுக்கான அலுவலக உபகரணங்கள் தளபாடங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளது. 55.16 மில்லியன் ரூபா பாடசாலைகளின் மாணவர் கற்றல் செயற்பாட்டினை மேம்படுத்துவதற்காக வழங்கப்படவுள்ளது. ஆசிரியர்களுக்கான பாட ரீதியிலான கருத்தரங்குகள், தர வட்டங்கள் மேற்கொள்வதற்காக 64.41 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 0.70 மில்லியன் ரூபா பாடசாலை மேம்பாட்டுத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மனிதவள அபிவிருத்திக்காக 0.62 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

### 3.5 ஏனைய நிதிமூலங்கள்

1. 250.00 மில்லியன் ரூபா இந்திய அரச உதவித்திட்டத்தின் கீழ் 5 மாவட்டங்களிலுமுள்ள 26 பாடசாலைகளில் கட்டடங்கள் நிர்மாணித்தல்
2. யுனிசெவ் மூலம் 50,000 US டொலர் முன்பள்ளி கல்வி, ஆரம்பக் கல்வி மேம்பாட்டிற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 4. 2016ம் ஆண்டில் வடக்கு மாகாண கல்வித் துறையில் அமுல்படுத்தப்படவுள்ள செயற்றிட்டங்கள்

1. தரம் 5 பரீட்சையில் தோற்றுகின்ற எல்லா மாணவர்களும் 70 க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெறுதல்,
2. க.பொ.த.(சா/த) பரீட்சையில் தோற்றுகின்ற எல்லா மாணவர்களும் இரண்டு திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக ஆகக் குறைந்தது 6 பாடங்களில் சித்தியடைதல்,
3. க.பொ.த.(உ/த) தரத்தில் 40% மான மாணவர்கள் விஞ்ஞானப் பிரிவிலும் 20% மானவர்கள் தொழில்நுட்ப பிரிவிலும் 20% மானவர்கள் முகாமைத்துவப் பிரிவிலும் 20% மானவர்கள் கலைப் பிரிவிலும் கற்பதனை உறுதிப்படுத்தல்,
4. க.பொ.த.(உ/த) பரீட்சையில் தோற்றுகின்ற எல்லா மாணவர்களும் முதல் தடவையில் (1st sitting) மூன்று பாடங்களிலும் சித்தியடையச் செய்தல்,
5. அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற கொள்கைக் கேற்ப வடமாகாணத்தில் ஒவ்வொரு பிரதேச செயலகர் பிரிவிலும் இவ்விரண்டு கிராமப்புற பாடசாலைகள் வீதம் தெரிவு செய்து அபிவிருத்தி செய்தல்,
6. வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்களுக்கு தண்டனை வழங்கும் முறையை இல்லாது ஒழித்தல்,
7. வடக்கு மாகாண சமூக உளநல நிலையத்தை வினைத்திறனுடனும் பயனுறுதிமிக்கதுமாக மாற்றுதல்,
8. விசேட தேவையுடைய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி அவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேப்படுத்த விசேட செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்,
9. மாணவர் இடைவிலகலைக் குறைப்பதற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
10. பெற்றோர்-பாடசாலை தொடர்புகளை சிறந்த முறையில் பேணல் மற்றும் மாதமொரு முறை பெற்றோர் ஆசிரியர் சந்திப்பை நடத்துதல்
11. ஆசிரியர் வலுவூட்டல்- சரியாக இனங் கண்டு பயிற்சிகளை கொடுத்து நேர் மனப்பாங்குடையவர்களை வளர்த்தல்
    a) நீண்ட கால நிலைத்திருத்தல்
    b) நிலைத்திருக்க கூடியது.
    c) நடைமுறை சாத்தியமுடையதாக இருத்தல்
12. மாணவர்களது உளப்பாங்கு (Mental Health)
13. பாடசாலையுடைய ஏற்றத் தாழ்வுகளை இல்லாது ஒழித்தல். (அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டம் மூலம்)
14. பின்தங்கிய பிரதேச பாடசாலைகளுக்கு கணித,விஞ்ஞான மேலதிக நேர வகுப்பு புதிய தொழில் நுட்ப முறையில் வழங்கல்.